பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 32/89 (V)

பொது நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7.
1992 மார்ச் மாதம் 16 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் முதல் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரச அதிபர்கள்,
மாகாண பொதுச் சேவை ஆணையாளர்களின்
செயலாளர்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்களின்/ அரசுடமை
கம்பெனிகளின் தலைவர்களுக்கும்/ பொறுப்புள்ள அதிகாரிகளுக்கும்.

32/89 (I) ஆம் இலக்கப் பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு அமைய 1980 ஜூலை வேலை நிறுத்தத்தில் பங்குபற்றிய அரச அலுவலர்களை மீண்டும் சேவைக்கமர்த்தல்.

---

1991 ஏப்ரல் 22 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 32/89(1) பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு மேலதிகமாக வெளியிடப்படுவது.

02. குறிப்பிட்ட சுற்றறிக்கையின் மூன்றாம் (03) பந்தியில் குறிக்கப்பட்டுள்ள ஜூலை வேலை நிறுத்தக்காரர்களின் பதவியேற்றம் சம்பந்தமாகப் பின்வரும் தெளிவுரைகள் செய்யப்பட்டுள்ளன.

03. வேலை நிறுத்தக் காலத்தின்போது தேர்ச்சியடைந்திருக்க வேண்டிய வினைத்திறன் தடைகாண் பரீட்சைகளுக்குத் தோற்ற முடியாமல் பாதிப்பு அடைந்தோர் எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் இரு பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள். அத்தகைய பரீட்சைகளில் தேர்ச்சி பெறும் உத்தியோகத்தர்கள் வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் உரிய திகதியில் தேர்ச்சிபெற்றவர்களாகக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

04. வயது 45 ஆண்டுகளை எய்தியவுடன் வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விதிவிலக்களித்தற்குரித்துடையவராக இருப்பின் குறிப்பிட்ட சம்பளப் படிநிலையை அடைந்தவுடன், வயது 45 ஆண்டுகளை எய்தியவுடன் வினைத்திறன் தடைகாண் பரீட்சையிலிருந்து விதிவிலக்களிக்கப்படுவாராயின் அவர் உரிய திகதியில் பரீட்சையில் தேர்ச்சி பெற்றவராகக் கொள்ளப்படலாம். அன்றேல் குறிப்பிட்ட சம்பளப் படிநிலையை அடைந்து அல்லது நடைபெறவிருக்கும் ஒரு பரீட்சைக்குத் தோற்றித் தேர்ச்சி பெறுமிடத்து உரிய திகதியில் தேர்ச்சி பெற்றவராகக் கொள்ளப்படுவார்.

05. ஒரு குறிப்பிட்ட பரீட்சையில் தேர்ச்சி பெற்றதன்பின் நியமனம் வழங்கப்பட்டு, முறையாக நடாத்தப்பெற்ற ஒரு நேர்முகத் தேர்முகத் தேர்வுக்கும் தோற்றிப் பின்னர் ஜூலை வேலை நிறுத்தத்தில் பங்குபற்றிய காரணத்தில் அது இரத்துச் செய்யப்பட்டவிடத்து, அத்தகைய நியமனம்

அத்தகைய இரத்துச் செய்யப்பட்ட திகதியிலிருந்து செயற்படுமாறு வழங்கப்படல் வேண்டும். மேலும், சொல்லப்பட்ட தகைமைகள் யாவும் நிறைவு செய்யப்பட்டு வேலை நிறுத்தத்தில் பங்குபற்றிய காரணத்தால் நியமனம் வழங்கப்படாவிடில், அந்நியமனங்கள் எத்திகதியில் வழங்கப்பட்டிருத்தல் வேண்டுமோ அத்திகதியிலிருந்து வழங்கப்படல் வேண்டும்.

06. திறமை அடிப்படையிலான பதவியேற்றங்களைப் பொறுத்தவரை; அத்தகைய பதவியேற்றங்கள் வேலை நிறுத்தத்தில் பங்குபற்றியமையென்ற ஒரே காரணத்திற்காகக் கொடுபடாவிடில், அத்தகைய பதவியேற்றங்கள் பதவியேற்றத்திற்கு உரிய திகதியிலிருந்து கொடுபடல் வேண்டும்.

07. வேலை நிறுத்தத்தில் பங்குபற்றிய காரணத்தால்

(1) பதவியேற்றப் பரீட்சை எதற்கும் தோற்ற முடியாதவர்கள்;

(11) பரீட்சையில் தேர்ச்சிபெற்றபோதும், ஆனால் குறிப்பிட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்கள்.

(111) பரீட்சையில் தேர்ச்சிபெற்று, நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டபோதும் புள்ளிகளைப் பெறாத அல்லது குறைந்த புள்ளிகளைப் பெற்ற ஒருவர் எனக் கருதப்பட்டவர்கள்.

ஆனால், தேவைப்படும் எல்லாப் பிற தகைமைகளையும் உடையவர்களாயிருந்தவர்கள் மூன்று (03) பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவார்கள். அவர்கள் அதில் தேர்ச்சிபெற்றால் வேலை நிறுத்தம் காரணமாகத் தோற்ற முடியாத கட்டிய பரீட்சையில் தேர்ச்சி பெற்றவர்களாக் கருதப்பட்டு நியமனங்கள் வழங்கப்படும்.

08. இந் நியமனங்கள் வழங்கப்படும் போது, ஓர் அலுவலரின் சேவைமூப்பு, சம்பள நிலுவைகள், சம்பள ஏற்றங்களைப் பெற்றிருப்பின் அவை உரிய திகதியிலிருந்து கொடுபட வேண்டும். அவ் வலுவலர் பதவியேற்றத்துக்கு உரிய திகதிக்குப் பின்னர் ஏதாவது தண்டனைக்காட்பட்டிருப்பின், அத்தகைய தண்டனை பதவியேற்றம் பெற்ற பின்னர் கொடுபட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

ஒப்பம் (எம். என். ஜுனைட்)

செயலாளர்,

பொது நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

தேவா/12.